தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.08.2013**

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் இன்று லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவில் நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிரம்புகிறது வீராணம் ஏரி: நாளை பாசனத்துக்கு நீர் திறப்பு**




கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 46.40 அடியை (மொத்தக் கொள்ளளவு 47.50 அடி) எட்டியுள்ளது.

வீராணம் ஏரி நிரம்பி வருவதாலும், ஏரியிலிருந்து ஆகஸ்ட் 27-ஆம் தேதி பாசனத்துக்கு நீர் திறந்து விட முதல்வர் உத்தரவிட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

காவிரி டெல்டா கடைமடைப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், கர்நாடகம் தமிழகத்துக்கு தர வேண்டிய நீரை தராததாலும் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டது.

மேலும் கடந்த மூன்று மாதங்களாக ஏரி, குளங்கள், ஆறுகள், வடிகால் வாய்க்கால்கள் வறண்டு போயின. குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரியான வீராணம் ஏரி முற்றிலும் வறண்டு போனது.

இதனால் ஏப்ரல் 27-ஆம் தேதி முதல் புதிய வீராணம் திட்டம் மூலம் சென்னைக்குக் குடிநீர் அனுப்புவது நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு கர்நாடகத்திலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டு மேட்டூர் அணை நிரம்பியதால் காவிரியில் நீர் திறக்கப்பட்டு கீழணையிலிருந்து வடவாறு மூலமாக வீராணத்துக்கு நீர் அனுப்பப்பட்டது. வறண்டு போய் இருந்த வீராணம் ஏரி நிரம்பியதால் மீண்டும் சென்னை குடிநீருக்கு ஆகஸ்ட் 17-ஆம் தேதி முதல் நீர் அனுப்பும் பணி தொடங்கியது.

தற்போது ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 46.40 அடியை (1197 மில்லியன் கனஅடி) எட்டியது. ஏரியின் மொத்தக் கொள்ளளவு 47.50 (1465 மில்லியன் கனஅடி) அடியாகும். வீராணம் ஏரிக்கு கீழணையிலிருந்து வடவாறு வழியாக விநாடிக்கு 77 கனஅடி அனுப்பப்படுகிறது.

ஏரியிலிருந்து சென்னை குடிநீர் வாரியத்துக்கு விநாடிக்கு 71 கனஅடி நீர் அனுப்பப்படுகிறது. மேலும் சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட் 27-ஆம் தேதி நீரைத் திறக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளதால், சம்பா சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்கா பகுதியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**இயற்கை வளங்களைச் சுரண்டுவதால் வாழ்வாதாரம் பாதிக்கும்**



இயற்கை வளங்களை எடுப்பதற்கு நிரந்தரமாகத் தடை விதிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர். நல்லகண்ணு வலியுறுத்தினார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடற்கரைப் பகுதியில் தாது மணல் முறைகேடுகள் குறித்து முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்; தாது மணல் ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும்; என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருநெல்வேலி சிந்துபூந்துறையில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கிவைத்து கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர். நல்லகண்ணு பேசியதாவது: தமிழகத்தில் கடற்கரைப் பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக தாது மணல் விதிகளை மீறி எடுக்கப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் கடற்கரைப் பாதுகாப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடற்கரைப் பகுதியில் வசிக்கும் மக்கள் நோய் தாக்கி பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

மணல் அள்ளியதால் நீர்ஆதாரம் குறைந்துவிட்டது. தாது மணல் எடுக்கப்படுவதால் கடல் சீற்றம் ஏற்படுகிறது. கடற்கரைக் கிராமங்களில் உள்ள நாழிக் கிணறுகளில் நீர் ஆதாரம் இல்லை. இயற்கை வளங்களைச் சுரண்டுவதால் எதிர்காலத்தில் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும்.

மணல், தாது மணல் போன்ற இயற்கை வளங்களை எடுப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடி வருகிறது என்றார் .

**விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டத்தால் ஆவின் பால் உற்பத்தி அதிகரிப்பு**



தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் மூலம், விழுப்புரம் மாவட்டத்தில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு 13,500 லிட்டர் கூடுதலாக பால் வரத்து உள்ளது.

கடந்த 2011-ம் ஆண்டு அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் தேதி விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார். விழுப்புரம் மாவட்டத்தில் இத் திட்டத்தின் மூலம் கடந்த இரு ஆண்டுகளில் 46 கிராமங்களில் 2,300 கறவைப் பசுக்கள் ரூ.8.10 கோடியில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது செயற்கை கருவூட்டல் மூலம் 900 கன்றுகள் ஈன்றுள்ளன.

கறவை பசுக்கள் வழங்கப்பட்ட பிற,கு ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஏற்கெனவே ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு 1,45,000 லிட்டர் பால் உற்பத்தி செய்து வந்தது. தற்போது ஆவின் நிறுவனத்துக்கு நாள் ஒன்றுக்கு கூடுதலாக 13,500 லிட்டர் பால் வரத்து உள்ளதாக ஆவின் நிறுவன தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து ஆட்சியர் வா.சம்பத்திடம் கேட்டபோது, விழுப்புரம் மாவட்டத்தில் 46 கிராமங்களில் 2,300 கறவைப் பசுக்கள் ரூ.8,10,75,000 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இந்த பசுக்கள் வழங்குவதற்கு முன் தினமும் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி சராசரியாக 1,45,000 லிட்டர் இருந்தது. விலையில்லா பசுக்கள் வழங்கிய பிறகு சராசரியாக நான் ஒன்றுக்கு கூடுதலாக சுமார் 13500 லிட்டர் பால் வரத்து உள்ளது.

பொதுவாக பயனாளிகளுக்கு கலப்பின ஜெர்சி பசுக்கள் வழங்கப்படுகின்றன. மலைப்பிரதேச மக்களுக்கு ஹோல்சின் பிரிசியன் பசுக்கள் வழங்கப்படுகின்றன. விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், மாற்றுத் திறனாளி, திருநங்கைகள் ஆகியோருக்கு இந்த பசுக்கள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கிறோம் என்றார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் அசப்பூர் கிராமத்தைச் சேர்ந்த பயனாளி சரோஜா என்பவர் கூறுகையில் எனக்கு 3 மகன், ஒரு மகள் உள்ளனர்.

அவர்களை படிக்க வைக்க சிரமப்பட்டேன். எங்களுக்கு வழங்கப்பட்ட கறவை பசுமூலம் காலையில் 7 லிட்டர் பாலும், மாலையில் 6 லிட்டர் பாலும் கிடைக்கிறது. ஆவின் நிறுவனத்தில் இந்த பால் ஒரு லிட்டர் ரூ.17-க்கு எடுத்துக் கொள்கின்றனர். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் எங்களுக்கு உதவியாக உள்ளது என்றார்.

**தக்காளி வரத்து அதிகரிப்பு: விலை சரிவு**

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை அடுத்துள்ள மெட்டாலா காய்கறிச் சந்தையில் தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிவடைந்தது.

நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள மெட்டாலா பகுதியில் காய்கறி விற்பனைச் சந்தை செயல்பட்டு வருகிறது. இங்குள்ள காய்கறி மண்டிகளுக்கு மெட்டாலாவை சுற்றியுள்ள கார்கூடல்பட்டி, ஒ.ராஜபாளையம், உரம்பு, மங்களபுரம், நாரைக்கிணறு, பிலிப்பாக்குட்டை, ஆயில்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும்.

இங்கு காய்கறிகளை வாய்மொழி ஏல முறையில் விற்பனை செய்வர். ஏலத்தில் அதிக விலைக்கு கேட்கும் வியாபாரிகளுக்கு காய்கறிகள் விற்கப்படும். இந்த நிலையில், கடந்த ஒரு வாரமாக சந்தைக்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இதனால், 10 கிலோ எடை கொண்ட கூடை ரூ. 120-க்கு விற்பனையானது. கடந்த வாரத்தில் ரூ. 180-க்கு விற்பனையான தக்காளி படிப்படியாக குறைந்து ரூ. 120-க்கு வந்துள்ளது.

இதனால், தினசரிச் சந்தையில் தக்காளி கிலோ ரூ.12 முதல் ரூ.15 வரை விற்பனையானது. வரத்து அதிகரிப்பால் விலை குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஆகஸ்ட் 29-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ஆகஸ்ட் 29-இல் நாமக்கல்லில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வருகிற 29ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. இதில், விவசாயிகளின் பல்வேறு குறைகள் மீது விவாதித்து தீர்வு காணப்பட உள்ளதால் மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகளை நேரடியாகவோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. தற்போது, டெல்டா மாவட்டங்களில் பாசனத் தேவை அதிகரித்துள்ளது. இதனால், சனிக்கிழமை முதல் காவிரி டெல்டா பாசனத்திதுக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 117.09 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 5,338 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 88.90 டி.எம்.சியாக இருந்தது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவைவிட பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறையத் தொடங்கியுள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்**

திண்டிவனம் அரிமா சங்கத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறையின் திண்டிவனம் கோட்டம் சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

திண்டிவனத்தை அடுத்த ஊரல் கிராமத்தில் நடைபெற்ற இம்முகாமுக்கு ஊரல் ஊராட்சித் தலைவர் பி.ராஜசேகர் முன்னிலை வகித்தார். கொள்ளார் கால்நடை மருத்துவர் சுரேஷ் வரவேற்றார். திண்டிவனம் அரிமா சங்க தலைவர்

என்.விஜயகுமார் தலைமை வகித்தார். ஜி.ராமமூர்த்தி முகாமை தொடங்கி வைத்தார்.

975 கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கப்பணிகள், செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அரிமா சங்க செயலர் என்.கணேஷ்காந்தி, பொருளர் டி.ராஜேந்திரன் உள்பட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**பயிர் காப்பீடுக்கான பிரீமியம் செலுத்த விவசாயிகளுக்கு வேளாண் துறை யோசனை**

விருதுநகர் வட்டத்தில் நடப்பாண்டு காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு குறிப்பிட்ட நாளில் பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெறுமாறு வேளாண்மை துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது குறித்து வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கல்யாணசுந்தரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விருதுநகர் பகுதியில் போதிய மழையில்லாமல் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் பயிர் சாகுபடி பாதிக்கப்படும் நிலையேற்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு பிர்க்காவிலும், பகுதி வாரியாக பயிருக்கு குறிப்பிட்ட நாள்களுக்குள் பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதன் அடிப்படையில் ஓண்டிப்புலிநாயக்கனூர் பகுதியில் நெல், மக்காச்சோளம், வாழை, பாசிப்பயறு, வச்சக்காரப்பட்டி பகுதியில் நெல், மக்காச்சோளம், உளுந்து, பாசிபயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களுக்கும், ஆமத்தூர் பகுதியில் நெல், மக்காச்சோளம், பாசிப்பயறு மற்றும் பருத்தி பயிர்களுக்கும் பயிர் காப்பீடு பிரீமியம் செலுத்துவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.12,944-க்கு பிரிமியம் தொகையாக வருகிற டிச.15-ம் தேதிக்குள் ரூ.116 செலுத்த வேண்டும். மக்காச்சோள

பயிருக்கு ஏக்கருக்கு ரூ.10284க்கு பிரீமியம் தொகையாக ரூ.116ம், உளுந்து பயிர் ஏக்கருக்கு ரூ.4608-க்கு பிரீமியம் தொகையாக ரூ.52ம், பாசிப்பயறு ஏக்கருக்கு

ரூ.2884-க்கு பிரீமியம் தொகையாக ரூ.32ம், நிலக்கடலை பயிர் ஏக்கருக்கு ரூ.15380-க்கு பிரீமியம் தொகையாக ரூ.242ம், சூரியகாந்தி பயிர் ஏக்கருக்கு ரூ.17080-க்கு பிரீமியம் தொகையாக 269ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் வரும் செப்-15ஆம் தேதிக்குள் பிரிமியத் தொகையைச் செலுத்த வேண்டும். இதேபோல், பருத்தி சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.4496-க்கு பிரீமியம் தொகையாக ரூ.257 வரும்

அக்-15ஆம் தேதிக்குள் அந்தந்த பகுதி வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்த வேண்டும். இத்தகவலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கல்யாணசுந்தரி தெரிவித்துள்ளார்.

**காலாவதியான பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம்**

துவரை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு முன் மானியம் கிடைக்கவில்லை என்றும், காலாவதியான பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம் செய்யப்படுவதாகவும் தேனியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ. முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கூறியது: பி.டி. ராஜன் கால்வாய் மற்றும் தந்தை பெரியார் கால்வாய் மூலம் கடை மடை கண்மாய்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில் மழைக் காலம் தொடங்குவதற்கு முன் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். பெருமாள் கவுண்டன்பட்டி அருகே சென்னைய கவுண்டன்பட்டி கண்மாயில் மண் அள்ளுவதை தடுத்து நிறுத்த வேண்டும். குள்ளப்புரம் அருகே கோவில்புரத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு வனத்துறை விதித்துள்ள தடையை நீக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர்களை கணக்கெடுக்க வேண்டும்.

மஞ்சளாறு புதிய அணை வாய்க்கால் 7-வது மடை கண்ணாறு ஆக்கிரமிப்பை அகற்றி புதிய கண்ணாறு ஏற்படுத்தித் தர வேண்டும். வறட்சியால்

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் குறுகிய கால கடனை மத்திய கால கடனாக மாற்ற வேண்டும் என்றனர்.

இதற்கு பதில் அளித்து மாவட்ட ஆட்சியர் கூறியது: விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரிடம் மனு அளிக்கலாம். சென்னையகவுண்டன்பட்டி கண்மாயில் மண் அள்ளுவதை தடுப்பதற்கு போடி வட்டாட்சியர், பொதுப் பணித்துறை மற்றும் கனிம வளத்துறை அதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டு விளக்கம் அளிக்க வேண்டும். பயிர் காப்பீடு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

துவரை நடவு திட்டத்தின் கீழ் மானியம் கிடைக்கவில்லை என்றும், காலாவதியான பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம் செய்யப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ள புகார் குறித்து வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும்.

கால்வாய்களை தூர்வாருவது குறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். வன விலங்குகள் தடுப்புக் குழு கூட்டம் நடத்தி, வன விலங்குகளால் விவசாய நிலங்களில் ஏற்படும் பயிர் சேதத்தை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்தும் குடிநீர் விநியோகம் அதிகரிக்கப்படாதது ஏன்?**



சென்னை மக்களின் குடிநீர்த் தேவைக்குப் போதுமான அளவு நீர் இருப்பு, ஏரிகளில் உள்ளதால், குடிநீர் விநியோகத்தை அதிகரிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், பூண்டி, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் உள்ளிட்ட குடிநீர் ஆதாரங்களில் போதிய நீர் இருப்பு இல்லை. இதனால் கடந்த ஏப்ரல்முதல் சென்னையில் குடிநீர் விநியோகம் குறைக்கப்பட்டது.

இதையடுத்து நாளொன்றுக்கு 83 கோடி லிட்டர் விநியோகப்பட்ட குடிநீரின் அளவு 55 கோடி லிட்டராகக் குறைக்கப்பட்டது.

இதன் காரணமாக நகரின் பல இடங்களில் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் சென்னையில் கடந்த 4 மாதங்களாக குடிநீர் விநியோகம் தேவைக்கு ஏற்ப வழங்கப்படவில்லை.

நீர்வரத்து அதிகரிப்பு: தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால், ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நீர் கடந்த மாதத்தில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது.

மேலும் புதிய வீராணம் திட்டத்தின் கீழ், வீராணம் ஏரியில் இருந்து நாளொன்று 18 கோடி லிட்டர் குடிநீர், கடந்த 17-ஆம் தேதியில் இருந்து சென்னைக்கு வருகிறது. இதனால் நகரின் குடிநீர் விநியோகம் 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 60 கோடி லிட்டராக உள்ளதாக குடிநீர் வாரியம் அண்மையில் தெரிவித்தது.

ஆனால் தற்போது உள்ள நீர் இருப்பின் படி 75 கோடி லிட்டருக்கும் அதிகமாகவே நகரில் குடிநீர் விநியோகம் செய்ய முடியும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் குடிநீர் பற்றாக்குறை உள்ள பல இடங்களில் விநியோகம் சீராகும் எனவும் கூறப்படுகிறது.

இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தென் மேற்கு பருவமழை தற்போது அதிக அளவு பெய்து வருவதால், ஆந்திரம், கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு அதிக அளவிலான நீர்வரத்து உள்ளது. இதன் தாக்கமாக நாளொன்றுக்கு 77 கோடி லிட்டர் கிருஷ்ணா மற்றும் வீராணம் நீர் சென்னைக்கு வருகிறது.

இதுவரை 571 மில்லியன் கன அடி கிருஷ்ணா நீர் ஆந்திரத்திலிருந்து வந்துள்ளது. இன்னும் சில நாள்களில் கிருஷ்ணா நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வீராணம் நீரும் தடையின்றி வருவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

சென்னையின் குடிநீர் ஏரிகளில் உள்ள நீரைப் பயன்படுத்தாமல் கிருஷ்ணா மற்றும் வீராணம் நீரைக் கொண்டே தினமும் சென்னையில் குடிநீர் விநியோகம் செய்ய முடியும். தனால் சீரான குடிநீர் விநியோகத்தை மீண்டும் நகரில் ஏற்படுத்த முடியும்.

நீர்மட்டம் உயர்வு: சென்னையின் குடிநீர் ஏரிகளில் தற்போது 1,300 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. ஆகஸ்ட் 13-ஆம் தேதிக்கு பிறகு குடிநீர் ஏரிகளின் நீர்மட்டம் குறையவில்லை.

கடந்த 10 நாள்களில் மட்டும் ஏரிகளின் நீர்மட்டம் 250 மில்லியன் கன அடி அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையின் குடிநீர் தேவைக்காக மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இங்கிருந்து நாளொன்றுக்கு 18 கோடி லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது.

ஏரிகளில் உள்ள நீர் இருப்பை சேமித்துவைத்துவிட்டு, சென்னையின் தினசரி நீர்வரத்தைப் பயன்படுத்தினாலே நகரின் குடிநீர் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும் எனக் கூறப்படுகிறது.

சென்னைக்கு தினமும் குடிநீர் வழங்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் பிரகாசமாக இருந்தும், விநியோகம் அதிகரிக்கப்படாதது ஏன் என்று குடிநீர் வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது: நீர்வரத்து அதிகரித்திருந்தாலும், பருவமழை போதிய அளவு பெய்தால் மட்டுமே ஏரிகளின் நீர் மட்டம் கணிசமாக உயரும். எனவே இருக்கும் நீரை சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காகவே குடிநீர் விநியோகம் பழையபடி உயர்த்தப்படவில்லை என்றனர்.

**நாளொன்றுக்கு சென்னைக்கு வரும் நீர்வரத்து விவரம்:**

கிருஷ்ணா நீர் - 60 கோடி லிட்டர்

வீராணம் நீர் - 17.5 கோடி லிட்டர்

நெம்மேலி, மீஞ்சூர் கடல் குடிநீர் -18 கோடி லிட்டர்

மொத்தம் 95.5 கோடி லிட்டர்

சென்னையின் ஒருநாள் குடிநீர் தேவை - 83 கோடி லிட்டர்

இதை தவிர, ஏரிகளில் தற்போது 3679 கோடி லிட்டர் நீர் இருப்பு உள்ளது. மேற்கூறிய அனைத்து நீர் வரத்தும் தடைபட்டாலும்கூட, ஏரிகளில் உள்ள நீர் இருப்பைக் கொண்டு சென்னையில் நாளொன்றுக்கு 83 கோடி லிட்டர் வீதம் 44 நாள்களுக்கு தொடர்ந்து விநியோகிக்கலாம்.

**சம்பா சாகுபடி விவசாயிகள் பயிர்க்காப்பீடு செய்யலாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் தற்போது சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்: சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சோ6ந்து தங்கள் பயிரை காப்பீடு செய்து இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து மகசூல் இழப்பைத் தவிர்த்துப் பயன்பெறலாம். இதற்காக தமிழக அரசு காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் 55 சதம் மானியமாக சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்குகிறது.

தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் இதுவரை வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகள் மட்டும் சேர்ந்து பயனடைந்தனர். தற்போது தமிழக அரசு அனைத்து விவசாயிகளுக்கும் பயன்பெறும் வகையில் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர காப்பீட்டு பிரிமியத் தொகையில் 55 சதம் மானியம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், இதர பிரிவினர்களுக்கு 50 சதம் மானியமும் வழங்கப்படுகிறது.

பிரிமியத்தொகை: ஒரு ஏக்கர் சம்பா நெற்பயிருக்கான காப்பீட்டுத் தொகை ரூ. 12,944. இதற்கான பிரிமியத் தொகை 2 சதமாகும். ஒரு ஏக்கர் சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பிரிமியத் தொகையாக ரூ. 259 செலுத்த வேண்டும். இந்த பிரிமியத் தொகையில் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 55 சதவீத

மானியமும் (அதாவது ஏக்கருக்கு ரூ. 116 - பிரிமியம்), இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும் (அதாவது ஏக்கருக்கு ரூ.129- பிரிமியம்) வழங்கப்படுகிறது.

வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் காப்பீட்டு பிரிமிய தொகையினை டிச. 15 2013 -க்குள் தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கிளைகளில் சேமிப்புக் கணக்கு தொடங்கி அதில் பிரிமியத்தொகையைச் செலுத்தலாம். இதற்கான விவரங்கள் சம்மந்தப்பட்ட வங்கிகள் மூலமாக தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

எனவே, சம்பா நெல் சாகுபடி செய்யும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம்.

இத்திட்டத்தில் குத்தகைதாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும் (வங்கிக் கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர்) சேர்ந்து பயன் பெறலாம். சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகள் கடைசி நாள் வரை காத்திருக்காமல் நெல் நடவுசெய்த உடனேயே பயிர்காப்பீட்டுத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 116.43 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 116.43 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4,795 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 18,023 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 4,000 கன அடி வீதமும், வெண்ணாற்றில் வினாடிக்கு 3,501 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 506 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**பயிர்க் கடன் புதுப்பித்தல் முகாம்**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அருகே அம்மாபேட்டை பாரத ஸ்டேட் வங்கிக் கிளை சார்பில், அவளிவநல்லூர் கிராமத்தில் பயிர்க் கடன் புதுப்பித்தல் முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு வங்கிக் கிளை மேலாளர் எஸ். அன்புமலர் தலைமை வகித்தார். தஞ்சாவூர் முதன்மை பொது மேலாளர் சுரேஷ்வக்யில் முன்னிலை வகித்தார். சென்னை மண்டல உதவி பொது மேலாளர் ராஜேந்திரன் கலந்து கொண்டு, விவசாயிகள் பயிர்க் கடன் புதுப்பித்தலால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயிர்க் கடன் பற்றி விளக்கமளித்தார்.

இதில் ஊராட்சி மன்றத் தலைவர் கே. சங்கர், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் ராமசாமி மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வங்கிக் கள அதிகாரி ஆர். சுரேஷ் வரவேற்றார். வங்கி கள அதிகாரி ஆர். ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

**"தொடக்க வேளாண் சங்கம் மூலம் ரூ. 46.83 லட்சம் கடனுதவி'**

லெட்சுமாங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் மூலம் 119 பேருக்கு ரூ. 46.83 லட்சத்தில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர். காமராஜ் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சிக்குள்பட்ட லெட்சுமாங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வளாகத்தில் ரூ. 15 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டு விழா, விவசாயக் கடன் வழங்கும் விழா மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் ஆர். காமராஜ் பங்கேற்று, புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டி, விவசாயக் கடனாக 97 பேருக்கு ரூ. 44.16 லட்சம், பூதமங்கலம் கூட்டுப் பொறுப்புக்குழுவுக்கு கடனாக ரூ. 1.92 லட்சம், தினத்தவணைக் கடனாக 9

பேருக்கு ரூ. 75 ஆயிரம் என மொத்தம் 119 பயனாளிகளுக்கு ரூ. 46. 83 லட்சம் மதிப்பிலான கடன் திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர்  ஜெயலட்சுமி அம்பிகாபதி, தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவர் எம்.எஸ். சங்கர், கோட்டாட்சியர் செ. ராஜேஸ்வரி,  கூத்தாநல்லூர் நகராட்சித் தலைவர் கே. ஜெயராஜ்,  துணைத் தலைவர் முகம்மது அஷ்ரப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

26.08.2013

## விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி 6 மாணவியர் முகாம்

வேதாரண்யம்: வேதாரண்யம் வட்டாரத்தில், வேளாண்மை பணியில் முன் அனுபவ பயிற்சியை பெற காரைக்கால் பண்டிதர் ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியர் 6 பேர் வந்துள்ளனர்.

அடுத்த மாதம் 19ம் தேதி வரை மாணவி சிவரஞ்சனி தலைமையில் 6 பேர்களும் வேதாரண்யம் வட்டாரத்துக்கு உள்பட்ட தென்னம்புலம், செட்டிப்புலம், செண்பகராயநல்லூர், கத்திரிப்புலம் கிராமப்பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் வேளாண்மை பணிகள் குறித்து மாணவியர் கேட்டறிகின்றனர்.
இதைத்தொடர்ந்து, அந்தந்த பகுதிக்கு ஏற்ற சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் வேளாண்மை கல்லூரி மாணவியர்கள் அளிக்கின்றனர். இத்தகைய விளக்க முகாமில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும் என, வேதாரண்யம் வேளாண்மைத்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பாசனத்துக்கு சுழற்சி முறையில் தண்ணீர் பவானிசாகர் இருப்பை தக்கவைக்க யோசனை

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் அணையில் இருந்து அனைத்து பாசனங்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், அணையின் நீர்மட்டம் குறைவதை தடுக்க, பாசனப்பகுதியில் சுழற்சி முறையை அமல்படுத்தினால், தண்ணீர் சேமிக்க வாய்ப்புள்ளது.
பவானிசாகர் அணையில் திறக்கப்படும் தண்ணீர், கொடிவேரி அணையில் இருந்து எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்துக்கு

திறக்கப்பட்டுள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 85 அடியாக உள்ளது. அணைக்கு நீர் வரத்து குறைவாக உள்ளது. நான்கு பாசனங்களுக்கும் தண்ணீர் திறப்பால், அணையின் நீர்மட்டம் விரைவில் குறையும்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் நடவு பணி முடிந்து, களை எடுக்கும் பணி தீவிரமடைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, 11 டி.எம்.சி., தண்ணீர் எடுக்கப்படும். கடந்தாண்டு, மே மாதத்தில் இருந்து ஆக., வரை ஏழு டி.எம்.சி., தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டது. குறைந்தளவு தண்ணீரில், 30 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு நெல் விளைச்சலாகி இருந்தன. ஏழு முதல், எட்டு பொதி (ஒரு பொதி - 260 கிலோ) நெல் விளைச்சலாகும். சுழற்சி முறையில் தண்ணீர் பாய்ச்சப்பட்டதால் சென்ற ஆண்டு ஏக்கருக்கு, 10 முதல், 14 பொதி வரை நெல் விளைச்சலாகி இருந்தது.

இதனால், நடப்பாண்டு தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதை விவசாயிகளே தற்காலிமாக நிறுத்தி உள்ளனர். நெல் வயலில் தண்ணீரின்றி காய்ந்து பாலையாக வெடித்த நிலையில் உள்ளது. வயலை நன்கு காய வைத்து, நீர் பாய்ச்சும்போது மகசூல் அதிகளவில் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது;

சென்ற ஆண்டு தண்ணீர் பற்றாக்குறையால், சுழற்சி முறையில் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டது. தண்ணீர் இன்றி வயல்கள் வறண்டு வெடித்து காணப்பட்டாலும், அதிகளவில் மகசூல் கிடைத்தன. ஒரு ஏக்கருக்கு, எட்டு பொதி நெல் கிடைக்க வேண்டிய இடத்தில், 10 முதல், 14 பொதி நெல் கிடைத்தன. இதனால், நடப்பாண்டு அதே வழியை பின்பற்றுகிறோம், என்றனர்.

பொதுப்பணி துறை அதிகாரி கூறியதாவது;

கடந்தாண்டு பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 30 அடியாக இருந்தது.

இதனால், சுழற்சி முறையில் தண்ணீர் வினியோகிக்க முடிவு செய்து, 10 நாட்களுக்கு முறை வைத்து தண்ணீர் வினியோகிக்கப்பட்டது, என்றனர்.

## மலர் சாகுபடியை தொடரநிதியுதவி வழங்கினால் "வசந்தம்'

ஊட்டி:"நீலகிரி மாவட்டத்தில், சிறு மலர் சாகுபடியாளர்கள் தொழிலை தொடர, நிதியுதவி வழங்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விசுவநாதன், செயலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், தோட்டக்கலை துறை ஆணையருக்கு வழங்கிய மனு:கடந்த 2005-2006ம் ஆண்டு, நீலகிரியில், தேயிலை விவசாயம் நலிவடைந்த போது, மாற்றுப்பயிர் திட்டமான மலர் சாகுபடியை அரசு ஊக்குவித்தது. அதன்படி, நீலகிரியில், 500க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.துவக்கத்தில், விவசாயிகளுக்கு பயன் கொடுத்த இத்தொழில், தரமற்ற நாற்று, விதை வினியோகம், மலர்களை மார்க்கெட்டிங் செய்ய இயலாமை, இயற்கை சீற்றத்தால் பசுமைக் குடில்கள் பாதிப்படைந்தது, இடைத்தரகர்களால் ஏமாற்றப்பட்டது, இடுபொருட்களின் விலை உயர்வு போன்ற பல காரணங்களால், தொழில் நலிவடைந்து, விவசாயிகள் நஷ்டமடைந்து, வங்கி கடனை திருப்பி செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.எங்களது கோரிக்கையை ஏற்று, ஊட்டி தும்மனட்டியில், 1.40 கோடி செலவில கார்னேஷன் நாற்று உற்பத்தி நிறுவனம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்தது. இந்நிறுவனம் மூலம், தரமான நாற்றுகளை பெற்று, சிறு விவசாயிகள் மீண்டும் நல்ல நிலைக்கு வருவர் என்ற நம்பிக்கை உள்ளது.

இருப்பினும், சேதமடைந்துள்ள பசுமைக் குடில்கள், சொட்டு நீர் பாசன வசதி, நெட்டிங் வசதிகளை செய்து கொள்ள நிதியுதவி அளித்து, நலிவுற்ற மலர் சாகுபடியாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு, அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## தானியங்களை பிரித்தெடுக்க நெற்களம் வேண்டும்' செவிலிமேடு விவசாயிகள் வலியுறுத்தல்

காஞ்சிபுரம் : தானியங்களை பிரித்துஎடுக்க நெற்களம் அமைத்து தர வேண்டும் என, செவிலிமேடு விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

கிணற்று பாசனம்

காஞ்சிபுரம் நகராட்சிக்கு உட்பட்டது செவிலிமேடு. பாலாற்றங்கரையை ஒட்டியுள்ள இப்பகுதியில், கிணற்று பாசனம் மூலம், குறைந்தளவு நிலப்பரப்பில், நெற்பயிர் மற்றும் தானியங்களை, இப்பகுதி விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

ஆனால், இவைகளைப் பிரித்தெடுக்க, நெற்களம் இல்லாததால், விவசாயிகள் கடந்த, 30 ஆண்டுகளாக தவித்து வருகின்றனர்.

எனவே, இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி, நெற்களம் அமைத்து தர வேண்டும், என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து, அப்பகுதி விவசாயி முருகன் கூறியதாவது:

நாங்கள், கிணற்றுப் பாசனம் மூலம் ஆண்டிற்கு இரண்டு போகம் நெற் பயிரையும், ஒரு போகம் தானியங்களையும் சாகுபடி செய்கிறோம்.

எங்களுக்கு, இங்குள்ள பொது இடத்தில் நெற்களம் அமைக்க வேண்டும் என, கடந்த 30 ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், எவ்வித நடவடிக்கையும் இல்லை.

நஷ்டம்

அறுவடை நேரத்தில் மழை வந்து விட்டால், தானியங்கள் வீணாகி, நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே, எங்களுக்கு நெற்களம் அமைத்துக் கொடுக்க, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

### மானிய விலையில் ஒட்டு ரக மா கன்றுகள்

காஞ்சிபுரம் : மேல்கதிர்பூர் அரசு தோட்டக்கலை பண்ணையில், ஓட்டு ரக மா கன்றுகள், மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

காஞ்சிபுரம் அடுத்த மேல்கதிர்பூர் கிராமத்தில், 130 ஏக்கர் பரப்பளவில், அரசு தோட்டக் கலை பண்ணை செயல்பட்டு வருகிறது. இங்கு, பூ மற்றும் பழ வகை செடிகள், விதைகள் ஆகியவை மானிய விலையில் விற்கப்படுகின்றன. தற்போது, பங்கனபள்ளி, அல்போன்சா, இமாபசந்து, பெங்களூரா ஆகிய ஒட்டு ரக மா கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து, தோட்டக் கலை பண்ணை உதவி வேளாண்மை இயக்குனர் ரமேஷ் கூறியதாவது:

தற்போது, பங்கனபள்ளி, அல்போன்சா, இமாபசந்து, பெங்களூரா ஆகிய ஒட்டு ரக மா கன்றுகள், மானிய விலையில், 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளை, அடர்வு நெருக்கு என்ற புதிய தொழில் நுட்பத்தில், நடவு செய்ய, விவசாயிகளுக்கு அறிவுறுத்துகிறோம். ஒரு ஏக்கருக்கு, 400 கன்றுகள் தேவைப்படும்.

இவை, 3 ஆண்டுகளில், காய்க்கத் துவங்கும். மா கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள், காஞ்சிபுரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் கோமதியை, 94423 06201 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

### மானிய விலையில் கடலை விதைக்கும் இயந்திரம்

சூணாம்பேடு : தேசிய வேளாண் நிறுவனத்தை சேர்ந்த உழவர் மன்ற விவசாயிக்கு, வேளாண் பொறியியல் துறை சார்பில், மானிய விலையில் கடலை விதைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

சூணாம்பேடு ஊராட்சிக்கு உட்பட்ட இல்லீடு கிராமத்தில், தேசிய வேளாண் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள உழவர் மன்றத்தில், உறுப்பினராக

உள்ள விவசாயிகளுக்கு, பல்வேறு விவசாய கருவிகள், மானிய விலையில்
வழங்கப்
படுகின்றன.

அதன்படி, இந்தலூர் கிராமத்தை சேர்ந்த உழவர் மன்ற உறுப்பினர் சங்கருக்கு, வேளாண் பொறியியல் துறை சார்பில், வேர்க் கடலை விதைக்கும் இயந்திரம், மானிய விலையில் வழங்கப்பட்டது.

இதுகுறித்து, வேளாண் நிறுவன துணை இயக்குனர் விஸ்வலிங்கம் கூறுகையில், ""உழவர் மன்ற உறுப்பினருக்கு, 74 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வேர்க் கடலை விதைக்கும் இயந்திரம், மானிய விலையில், 46 ஆயிரத்து 500 ரூபாய்க்கு வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம், வேர்க் கடலை மட்டுமின்றி, பாசி பயறு, கேழ்வரகு, மக்காச்சோளம் போன்ற தானியங்களையும் விதைக்கலாம். விவசாயத்திற்கு, ஆட்கள் பற்றாக்குறை பிரச்னைக்கு தீர்வாக, இந்த இயந்திரம் பயனுள்ளதாக இருக்கும்," என்றார்.

## மழையை எதிர்பார்த்துள்ள கெங்கவல்லி விவசாயிகள்

கெங்கவல்லி: கெங்கவல்லி பகுதியில், தேக்கு, குமிள், பலா உள்ளிட்ட மரக்கன்றுகளை நடவு செய்ய, மழையை எதிர்பார்த்து, விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில், விவசாய நிலம், பள்ளிகள், கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் மரங்களை வளர்க்கும்படி, தமிழக அரசு உத்தரவிட்டது. தமிழக உயிர்ப்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்கல், நபார்டு, பசுமை பரப்பு ஆகிய திட்டத்தின் கீழ், குறுகிய காலத்தில் பலன் தரும் தேக்கு, குமிள், பலா உள்ளிட்ட நீண்ட கால பயனுடைய மரக்கன்றுகளை, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், விவசாயிகளுக்கு செடிகள் வழங்குவதுடன், பராமரிப்பு செலவின தொகையும் வழங்கப்படுகிறது. தம்மம்பட்டி வனச்சரகம், கூடமலை கிராமத்தில், தனியார் விவசாய தோட்டத்தில், சவுக்கு, பூவரசு, மூங்கில், நாவல், தேக்கு, ஈட்டி,

பலா, இலுப்பை, மகா கனி, வேம்பு, அரசு, குமிள் உள்பட மரக்கன்றுகள், மொத்தம், 77 ஆயிரத்து, 500 செடிகள் வளர்க்கப்பட்டது.
இச்செடிகள், விவசாய நிலம், பள்ளிகள், கல்லூரி மற்றும் வனப்பகுதியில் நடவு செய்ய தயாராக உள்ளது. பருவமழை பொய்த்து போனதால், விவசாய கிணறுகள் வறண்டு, வானம் பார்த்த பூமியாக விளை நிலங்கள் காட்சியளிப்பதால், செடிகள் நடவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
அதனால், நடவுக்கு தயாராக உள்ள செடிகளை, வனத்துறை அலுவலர்கள், விவசாயிகளுக்கு வினியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை சரிவு

ராசிபுரம்: மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளதால், தக்காளி விலை குறைந்துள்ளது. அதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை மெட்டாலாவில், காய்கறி மார்க்கெட் உள்ளது. இங்குள்ள மண்டிகளுக்கு, மெட்டாலா மற்றும் அதை சுற்றியுள்ள கார்கூடல்பட்டி, ராஜாபாளையம், ஒரம்பு, நாரைக்கிணறு, பிலிப்பாக்குட்டை, ஆயில்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, தக்காளி மற்றும் அறுவடை செய்யப்பட்ட அனைத்து காய்கறிகளும், விற்பனைக்கு கொண்டு வரப்படும். அவ்வாறு கொண்டு வரப்பட்ட காய்கறிகளுக்கு, வியாபாரிகள் நேரடியாக வாய்மொழி டெண்டர் மூலம் விலை கோரப்படும். அதில், அதிக விலைக்கு கேட்கும் வியாபாரிகளுக்கு காய்கள் விற்கப்படும். கடந்த, ஒரு வாரமாக, அதிக உற்பத்தி காரணமாக, தக்காளி வரத்து அதிகரித்துள்ளது.
அதனால், பத்து கிலோ எடை கொண்ட, ஒரு கூடை, 120 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தில், 180க்கு விற்பனை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வரத்து அதிகரித்துள்ளதால், தக்காளி விலை குறைந்துள்ளது என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## நெல் வரத்து அதிகரிப்பு: அரிசி விலை குறைகிறது

அதிகரித்துள்ளதால்,ஒருமூட்டைக்கு,150முதல்,200ரூபாய்வரை,அரிசி விலை குறைந்துள்ளது.இதன் விலை, மேலும் வீழ்ச்சி அடையும் என, அரிசி ஆலை அதிபர்கள் தெரிவித்தனர்.தமிழகத்தில், கொங்கு மாவட்டங்களில், தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டாலும், தென் மாவட்டங்களில் அதிகளவு மழை பெய்துள்ளது.

**நெல் உற்பத்தி** :அதே சமயம் கர்நாடகாவில் பெய்த பலத்த மழை காரணமாக, மேட்டூர் அணை நிரம்பி, டெல்டா மாவட்ட பாசனத்துக்கு தண்ணீர் உரிய நேரத்தில் சென்றுள்ளது. மேலும்,டெல்டா மாவட்டத்திலும் மழை பெய்துள்ளது.இதன் மூலம் நடப்பாண்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு,நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து வரும் அரிசி ரகங்களின் விலை குறைந்துள்ளது.கடந்த, 2012 ஆகஸ்ட், 22ம்தேதி கர்நாடகாவில் இருந்து வந்த(மொத்தவிலையில்) வெள்ளை பொன்னிஅரிசி,75 கிலோ மூட்டை,3,225 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது மூட்டை, 3,450 ரூபாய்க்கு விற்பனை யாகிறது.

**வெள்ளை பொன்னி:**பி.பி.டி., சன்னரகம் ஒரு மூட்டை,2,475 ரூபாய்க்கு விற்பனையானது. ஒரு மூட்டை,2,850 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கர்நாடகா டீலக்ஸ் உயர் ரகம் அரிசி ஒரு மூட்டை,3,150 ரூபாய்க்கு விற்பனையானது.இது, தற்போது, 3,375 ரூபாய்க்கு விற்பனையாகிறது.கடந்த சில நாட்களாக நிலைமை மாறி, அரிசி விலை படிப்படியாக குறையத் துவங்கி உள்ளது.செஞ்சியில் இருந்து வரக்கூடிய வெள்ளைபொன்னி,ஒரு மூட்டை,3,450ரூபாயிலிருந்து,3,225ரூபாயாக குறைந்துள்ளது. பி.பி.டி.ரகம் ஒருமூட்டை, 3,150லிருந்து,2,850ரூபாயாககுறைந்துள்ளது.ஏ.டி.டி.,43 ரகம்அதிசய பொன்னி ஒரு மூட்டை, 2,250லிருந்து, 2,100 ரூபாயாக குறைந்துள்ளது.

ஏ.டி.டி.,45 ரகம் அரிசி ஒரு மூட்டை, 2,175லிருந்து,1,950 ரூபாயாக குறைந்துள்ளது.கிராம்தார் இட்லிஅரிசி ஒரு மூட்டை, 2,625லிருந்து,2,475 ரூபாயாக குறைந்துள்ளது.ஏ.டி.டி., இட்லி அரிசி ஒரு மூட்டை,2,250லிருந்து,2,025ரூபாயாக குறைந் துள்ளது.அம்பை,16 ரக அரிசி ஒரு மூட்டை,2,250லிருந்து, 2,025 ரூபாயாக குறைந்து உள்ளது.இது குறித்து,சேலம் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் சியாமளநாதன் கூறியதாவது:

கடந்த,2012ம் ஆண்டு அதிகளவு வறட்சி காணப்பட்டதால்,ஆகஸ்ட் மாதத்தில் இருந்து, அரிசிவிலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே சென்றது. குறிப்பாக அக்டோபர் மாதம் முதல், தொடர்ந்து நடப்பாண்டு ஜூலை வரை, இட்லி அரிசி உட்பட பொன்னி பச்சரிசி, பொன்னி புழுங்கல் அரிசி என, அனைத்துமே விலை உயர்ந்து காணப்பட்டன.

**புழுங்கல் அரிசி:**பொன்னி புழுங்கல், பொன்னி பச்சரிசி ஒரு கிலோ, 55 ரூபாய் வரை சென்றது. அரிசி விலை தொடர்ந்து உச்சத்திலேயே இருந்ததால், ஏழை குடும்பத்தை சேர்ந்த பலர் ரேஷன் அரிசியை சாப்பிட ஆரம்பித்தனர்.எப்போது அரிசி விலை இறங்கும் என, நடுத்தர மற்றும் ஏழை மக்கள் எதிர்பார்த்து இருந்தனர். அவர்களின் கனவு பலித்தது போல, பத்து மாதங்களுக்கு பின், தற்போது அரிசி விலை குறைந்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவமழையின்போது, தென் மாவட்டங்களில் குறைந்த அளவிற்கே மழை பெய்யும். ஆனால், நீண்ட காலத்துக்கு பிறகு நடப்பாண்டு யாருமே எதிர்பாராத வகையில் பலத்த மழை பெய்தது.எனவே, இந்த பகுதியில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, நெல் விளைச்சல் அதிகம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**கர்நாடகா:**சேலம் பகுதியில் மழை பெய்யாவிட்டாலும்,கர்நாடகாவில் தொடர்ந்து பெய்த மழையால்,மேட்டூர் அணை நிரம்பி,டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.போதுமான

தண்ணீர்,விவசாயிகளுக்கு கிடைத்துள்ளதால்,விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் தெற்கு,டெல்டாமாவட்டங்களில் இருந்து, 19 லட்சம் டன் நெல் உற்பத்தியாகும்.ஆனால்,நடப்பாண்டு நெல் விளைச்சல்,25 லட்சம் டன்னை தாண்டும் என நம்பலாம். இரண்டு மாதத்தில் அரிசி விலையில் மேலும் சரிவு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.08.2013**

**மஞ்சள் விலை உயர்வு ஏலத்தில் ரூ.60 லட்சம் வர்த்தகம்**



ஆத்தூர் : புதுப்பேட்டை கூட்டுறவு சங்கத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் விரலி ரக மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.7,539 வரை ஏலம் போனது. சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் தோறும் மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஆத்தூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 400 விவசாயிகள் 1,500 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இவை, ரூ.60 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனையானது. சேலம், ஈரோடு, நாமக்கல், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் தனியார் மசாலா நிறுவனங்களின் பிரதிநிதிகள் மஞ்சளை போட்டி போட்டு வாங்கினர். விரலி ரக மஞ்சள் குவிண்டால் ஒன்று ரூ.5,889 முதல் ரூ.7,539 வரை

ஏலம் போனது. உருண்டை ரகம் ரூ.4,089 முதல் ரூ.6,029 வரையிலும், பனங்காளி ரகம் ரூ.6,839ல் இருந்து ரூ.11,585 வரையும் விற்பனையானது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் அனைத்து ரக மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ.500 வரை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**பட்டுக்கூடு விலை கிலோ ரூ.150 உயர்வு**



தென்காசி: கடந்த மாதம் வரை ஒரு கிலோ பட்டு நூல் 3 ஆயிரம் ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில், டாலருடனான ரூபாய் மதிப்பு சரிவு காரணமாக, அதே ஒரு கிலோ பட்டு நூலுக்கு தற்போது 4,200 ரூபாய் கொடுக்க வேண்டியது உள்ளது.

இதனால், கடந்த மாதம் வரை ஒரு கிலோ 300 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த வெள்ளை பட்டுக்கூடு, தற்போது 450 முதல் 475 ரூபாய் வரை விலை ஏற்றம் கண்டுள்ளது. மஞ்சள் நிற பட்டுக்கூடு கிலோ ஒன்றுக்கு 250ல் இருந்து 350 ரூபாயாக உயர்ந்துள்ளது. விலையேற்றம், பட்டு நூல் மற்றும் பட்டுக்கூடுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியின் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**திருமண சீசன் துவங்கியதால் கற்பூர வெற்றிலை விலை 2 மடங்கு அதிகரிப்பு**
**பரமத்திவேலூர்: திருமண சீசன்**



3.துவங்குவதால் வெற்றிலை விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கற்பூர வெற்றிலை ஒரே வாரத்தில் இரண்டு மடங்கு விலை அதிகரித்துள்ளது.நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா பாண்டமங்கலம், பொத்தனூர், வெங்கரை, நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இதேபோல் கரூர் மாவட்டத்திலும் பல இடங்களில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது காவிரியில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளதால் வெற்றிலை சாகுபடி மீண்டும் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது.பரமத்திவேலூர், மோகனூர், கரூர் பகுதியில் சாகுபடி செய்யப்படும் கற்பூரி ரக வெற்றிலைக்கு வட மாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த வார ஏலம் நேற்று நடந்தது. இதில் கடந்த வார விலையை ஒப்பிடுகையில் கற்பூர வெற்றிலை விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. அதேபோல் வெள்ளை வெற்றிலையும் விலை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் 104 கவுளி (100 வெற்றிலை கொண்டது ஒரு கவுளி) கொண்ட ஒரு கோட்டை வெள்ளை வெற்றிலை 3,500க்கும், கற்பூர வெற்றிலை ஒரு கோட்டை 700க்கும் ஏலம் போனது. ஆனால், இந்த வார ஏலத்தில் விலை உயர்ந்து காணப்பட்டது. அதன்படி, வெள்ளை வெற்றிலை ஒரு கோட்டை 4,200க்கும், கற்பூர வெற்றிலை ஒரு கோட்டை 1,500க்கும் ஏலம் போனது.வழக்கமாக ஆடி மாதத்திற்கு பின்னர் திருமண சீசன் துவங்கி விடும். அடுத்து வரும் நாட்களில்

முகூர்த்த நாட்கள் அதிகமாக இருப்பதால் தேவை அதிகரித்து விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது காவிரியில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் அடுத்த சில வாரங்களில் புதிய வெற்றிலை வரத்து அதிகரித்து விலை குறையவும் வாய்ப்புள்ளது.

**நாமக்கல் ஏற்றுமதி நிறுவனங்களில் முட்டை அனுப்பும் பணி மும்முரம்**



நாமக்கல்: நாமக்கல் முட்டை மீதான ஈர்ப்பால் ஆப்கானிஸ்தான் அரசு முட்டை ஏற்றுமதி செய்ய ஆர்டர் வழங்கி உள்ளது. இதற்கான பணியில் ஏற்றுமதியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நாமக்கல் மண்டலத்தில் பறவை காய்ச்சல் பீதியால் முடங்கி கிடந்த முட்டை ஏற்றுமதி தொழில் தற்போது ஆப்கானிஸ்தான் நாட்டு மார்க்கெட் மூலம், மும்முரம் அடைந்துள்ளது. ஆப்கானிஸ்தான் நாட்டில் கடுமையான குளிர்காலம் தொடங்கியுள்ளதால் அந்நாட்டு மக்கள் தினமும் 10 முட்டை வரை சாப்பிடுகின்றனர். இதனால் முட்டை தேவை அதிகரித்து பாகிஸ்தான், ஈரான் நாட்டில் இருந்து ஆப்கான் அரசு இறக்குமதி செய்து வந்தது.

இந்திய முட்டைகள் தரமாகவும், குறைந்த விலையிலும் கிடைப்பதால் ஆப்கானிஸ்தான் அரசு அதிக அளவில் இந்திய கோழி முட்டையை இறக்குமதி செய்ய அனுமதி அளித்துள்ளது. அங்குள்ள முட்டை விற்பனையாளர்கள், நாமக்கல் மண்டலத்தில் உள்ள முட்டை ஏற்றுமதியாளர்களுக்கு ஆர்டர் அளித்துள்ளனர். இதைத் தொடர்ந்து கடந்த இரு வாரமாக நாமக்கல் பகுதியில் உள்ள முட்டை ஏற்றுமதி நிறுவனங்களில் இருந்து கன்டெய்னர் மூலம் அந்நாட்டுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஏற்றுமதி அதிகரிக்க தொடங்கியுள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.08.2013**

## நெல், பருப்பு, சிறு தானியங்கள் உள்ளிட்ட கரீப் பயிர்கள் சாகுபடி பரப்பளவு 9.68 கோடி ஹெக்டேரை தாண்டியது



புதுடெல்லி

நடப்பு கரீப் பருவத்தில் (ஜுன்– அக்டோபர்) நெல், பருப்பு, சிறு தானியங்கள் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி பரப்பளவு ஒட்டுமொத்த அளவில் 9.68 கோடி ஹெக்டேரை தாண்டியுள்ளது. இது ஒரு சாதனை அளவாக கருதப்படுகிறது.

### 91 சதவீதம் நிறைவு

பொதுவாக கரீப் பருவம் முழுவதுமாக 10.68 கோடி ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டில் ஆகஸ்டு மாதம் நிறைவடைவதற்குள் 91 சதவீத பரப்பளவில் நடவுப் பணிகள் நிறைவடைந்து விட்டன. சென்ற ஆண்டு கரீப் பருவத்தில் 8.98 கோடி ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் சாகுபடி நடைபெற்றது. அதனுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் 108 சதவீத பரப்பளவில் சாகுபடிப் பணிகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் பயிர்கள் சாகுபடியினை மேற்கொள்கின்றனர். வட மாநிலங்களில் இப்பருவங்கள் முறையே கரீப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இவை முறையே குறுவை மற்றும் சம்பா என்றழைக்கப்படுகின்றன. இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் பங்களிப்பு 15 சதவீத அளவிற்கே உள்ளது.

**நெல் சாகுபடி பரப்பு**

நடப்பு கரீப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு 3.25 கோடி ஹெக்டேரை எட்டியுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 3.15 கோடி ஹெக்டேராக இருந்தது. நெல் பயிரிடும் பரப்பளவு கணிசமாக உயர்ந்துள்ளதால் இந்த ஆண்டில் அரிசி உற்பத்தி அமோகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அக்டோபர் மாதம் தொடங்கும் புதிய சந்தை பருவத்தில் 3.45 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய 2011–12 பருவத்தில் வரலாறு காணாத அளவிற்கு 3.51 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

**மக்காச்சோளம்**

மக்காச்சோளம் பயிரிடும் பரப்பளவு பொதுவாக 71.48 லட்சம் ஹெக்டேராக இருப்பது வழக்கம். ஆனால் இந்த முறை சாகுபடி பரப்பளவு 80 லட்சம் ஹெக்டேரை தாண்டியுள்ளது. இதனால் மக்காச்சோளம் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. கோழிப்பண்ணைகளில் பிரதான தீவனமாக மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. முக்கிய எண்ணெய் வித்தான சோயாபீன் வழக்கமாக 96 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்படுவது வழக்கம். ஆனால் தற்போதைய மதிப்பீடுகளின்படி சாகுபடி பரப்பளவு 1.22 கோடி ஹெக்டேராக விரிவடைந்துள்ளது.

கரும்பு தென் மாநிலங்களில் ஜனவரி, பிப்ரவரி, ஜூலை, ஆகஸ்டு ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. வட மாநிலங்களில் பிப்ரவரி, மார்ச், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களில் பயிர் செய்யப்படுகிறது. அறுவடைப் பணிகள் அக்டோபர்–செப்டம்பர் மாத காலம் முழுவதுமாக மேற்கொள்ளப்பகின்றன.

உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. நாட்டின் கரும்பு உற்பத்தியில், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது. மகாராஷ்டிராவில், பெரும்பாலான விவசாயிகள், ஜூன் மாதத்தில் (பருவமழை தொடங்கும்போது) விதைப்பு பணிகளை தொடங்குகின்றனர்.

**கரும்பு, சணல்**

நடப்பு கரீப் பருவத்தில் இதுவரை கரும்பு 48.53 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 50.06 லட்சம் ஹெக்டேராக இருந்தது. சணல் மற்றும் மெஸ்தா சாகுபடி பரப்பு 8.36 லட்சம் ஹெக்டேரிலிருந்து 8.31 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. வேளாண் பருவம் முழுமையாக நிறைவடையவில்லை என்பதால் இதனை பின்னடைவாக கருத இயலாது.

பருப்பு பயிரிடும் பரப்பளவு 85.32 லட்சம் ஹெக்டேரிலிருந்து 99.63 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. சிறு தானியங்கள் சாகுபடி பரப்பளவு 1.65 கோடி ஹெக்டேரிலிருந்து 1.89 கோடி ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 1.62 கோடி ஹெக்டேரிலிருந்து 1.87 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. பருத்தி சாகுபடி பரப்பளவில் அதிக வேறுபாடின்றி 1.11 கோடி ஹெக்டேர் என்ற அளவில் உள்ளது.

## நடப்பு நிதி ஆண்டில்
## மத்திய அரசு இதுவரை வழங்கிய உணவு மானியம் ரூ.46,349 கோடி

மத்திய அரசு நடப்பு நிதி ஆண்டில் இதுவரை இந்திய உணவு கழகம் மற்றும் சில மாநில அரசு அமைப்புகளுக்கு உணவு மானியமாக ரூ.46,348.92 கோடியை விடுவித்துள்ளது. இதில் ரூ.41,558.52 கோடி இந்திய உணவு கழகத்திற்கும், ரூ.4,790.68 கோடி சில மாநில அரசு அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் உணவு மானியத்திற்காக ரூ.90,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் (2012–13) ரூ.85,000 கோடியாக (மறுமதிப்பீடு) இருந்தது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நகர்ப்புற மக்கள்தொகையில் 50 சதவீதத்தினருக்கும், கிராமப்புற மக்கள்தொகையில் 75 சதவீதத்தினருக்கும் குறைந்த விலையில் உணவு தானியங்கள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் முழுவீச்சில் அமலுக்கு வரும்போது, இன்றைய விலைவாசி அடிப்படையில் மத்திய அரசின் உணவு மானிய செலவினம் ஆண்டுக்கு ரூ.1.25 லட்சம் கோடியாக இருக்கும்.

**எகிப்து, சிரியாவில் கலவரம் நறுமண பொருள்கள், தேயிலை, அரிசி ஏற்றுமதி கடும் பாதிப்பு**



கொல்கத்தா

எகிப்து, சிரியாவில் உள்நாட்டு கலவரங்கள் நடைபெறுகின்றன. இதனால் நறுமண பொருள்கள், தேயிலை மற்றும் அரிசி ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

**ஒரு கோடி டன்**

இந்திய தேயிலையை அதிகம் வாங்கும் நாடுகளுள் எகிப்தும் ஒன்று. நம்மிடமிருந்து அந்நாடு ஆண்டுக்கு ஒரு கோடி டன் தேயிலையை இறக்குமதி செய்து வந்தது. ஆனால் இந்த ஆண்டில் அந்நாட்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து எந்த

விசாரணைகளும் வரவில்லை. மேலும் அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால் சீரகம், வெந்தயம், மஞ்சள், மிளகாய் உள்ளிட்ட பல்வேறு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியும் குறைந்துள்ளது. வெந்தயத்திற்கான மிகப்பெரிய சந்தை எகிப்து என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு தற்போது ஏற்பட்டுள்ள தேக்கநிலை தற்காலிகமானது என்றும், 2–3 மாதங்களில் இந்த நிலை மாறிவிடும் என்றும் ஏற்றுமதியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

எகிப்திற்கான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 50 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிகிறது. அந்நாடு நறுமணப் பொருள்களை மொராக்கோ, லிபியா, ஜோர்டான், துனிசியா, லெபனான் போன்ற நாடுகளுக்கு மறுஏற்றுமதி செய்கிறது. தற்போது அங்கு இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மறுஏற்றுமதி நடவடிக்கைகளிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்திய நறுமணப் பொருட்களுக்கான பெரிய ஏற்றுமதி சந்தைகளாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளும் நம்மிடம் இருந்து இப்பொருட்களை அதிகம் வாங்குகின்றன. கடந்த 2012–13–ஆம் நிதி ஆண்டில் ரூ.11,171 கோடிக்கு நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது ஒரு சாதனை அளவாக இருந்தது.

**அரிசி ஏற்றுமதி**

எகிப்து, சிரியா ஆகிய இரு நாடுகளுமே இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசியை இறக்குமதி செய்து வருகின்றன. 2012–13–ஆம் நிதி ஆண்டில் சிரியாவிற்கு 5,848 டன் பாசுமதியும், 38,113டன் சாதாரண அரிசியும் ஏற்றுமதி செய்யப்பட்டது. எகிப்து நாட்டுக்கு 7,526 டன் பாசுமதியும், 36,824 டன் சாதாரண அரிசியும் ஏற்றுமதியானது. இந்த இரு நாடுகளிலும் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக அரிசி ஏற்றுமதியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுக்கு ரூ.44,000 கோடி உணவுப் பொருள்கள் வீண் பாராளுமன்றத்தில் தகவல்

காய்கறி, பழங்கள், தானியங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் ஆண்டுக்கு ரூ.44,000 கோடி அளவிற்கு வீணடிக்கப்படுவதாக பாராளுமன்ற

மாநிலங்களவையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

உணவு தானியங்களை சேமிக்க போதுமான கிடங்குகள் இல்லாதது மற்றும் காய்கறி, பழங்களை பாதுகாக்க குளிர்பதன கிடங்குகள் போதிய அளவு இல்லாததுதான் உணவுப் பொருள்கள் வீணாவதற்கு காரணம். காய்கறி, பழங்கள் மட்டும் ரூ.13,309 கோடிக்கு வீணாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கோதுமை, அரிசி உள்பட வீணாகும் இதர தானியங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் வீணாகும் மொத்த உணவுப் பொருள்களின் மதிப்பு ரூ.44,000 கோடியை தாண்டி விடும்.

திட்டக்குழு இது குறித்து ஆய்வு மேற்கொள்ள 2012–ஆம் ஆண்டில் சவுமித்ரா சவுத்ரி தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. தற்போது 2.90 கோடி டன் காய்கறி, பழங்களை பாதுகாக்கும் அளவிற்கே குளிர்பதன கிடங்குகள் உள்ளன என்றும், உண்மையில் 6.13 கோடி டன்னை பாதுகாக்கும் அளவிற்கு இந்த வசதி வேண்டும் என்றும் இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்தது.

இந்நிலையில் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் குளிர்பதன கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க முடியும் என சரத் பவார் கூறினார்.